உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 1943 July No. 7

விஷய சூசிகை. பக்கம்


| | |
|---|---|
| பலவகை (பண்டிட் நாராயணய்யங்கார்) | 85—88 |
| யோகரத்நாகரம் ஷை | 21—28 |
| ஜீவானந்தம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்) | 1—4 |
| ஆயுர்வேதத்தின் பெருமை (ஷை) | 4—8 |



சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No 2, Police Station West Lane, Madura.


காபிரைட்] [விலை 0—3—0

...வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—13.

ட்
டுவை/M25ய
N43.5.7

போல் உங்கள் சங்கங்கள்போன்ற பல ஏற்றகலைவர்களுடன் ஒற்று
மையாகவும் தனிமையிலும் உத்தாரண வேலையில் ஈடுபட்டுக்கொண்டி
ருப்பது நோக்கங்களைப் போக்குவதற்கு அறிகுறிகளென்று மகிழ்
கிறேன். வளர்க்க வொண்ணாது கடமையைக்கடந்த இவ்வாயுர்வேத
த்தின் பெருமைகளில் இரண்டொன்றைக் கூட்டிக்கூறிவிடாதுசெல்
வதுதகா தெனப்பயந்து தெரிந்தவைகளைச்சில இங்கடியில்கூறுகி
றேன். அபத்தங்களை முன்னும்பின்னும்பிர் திருத்தத் தங்களைமன்றா
க்கேட்டுக்கொள்கிறேன். யுக்தி அநுபவங்களின் பேரில்வியாதிகளுக்
கு வியாப்யரூபத்தில் கூறப்பட்டுவரும் பூச்சி காரணங்களைப்பூஜ்யப்
படுத்தி எக்காலத்தும் வியாபகமாகத் திரிதோஷங்களைக்காரணமாய்க்
காண்பித்திருப்பதால் எவ்வியாதியையும் முன்னறிவில்லாதிருப்பி
னும் தோஷ வைஷம்யானுஸாரம் பரிஹரித்துக்கொள்ள உபாயம்
காண்பித்திருப்பதோடு, மற்றுவியாதிகளும் திரேகப் பிணிகளோ
டுள்ள ஸம்பந்தங்களும் தூத, ஜாதக, சகுன, ஸ்வப்னக்குறிப்புகளும்
பஞ்சகர்மாபோன்ற பொதுப் பரிஹாரங்களும், தினசரியை, ருது
சரியை அன்னபானவிதி, அன்னரக்ஷை, வேகத்தடைக்கெடுதல்
கள் முதலிய பல விஷயங்கள் இதில் அதிகப்படியானவைகளே.
மக்களுக்கும் ஊர்களுக்கும் உபயோகப்பட வேண்டிவரின் ஆயி
ரக்கணக்கான வருடமாயினும் பிசகாமல் கெட்டுப்போகாது பத்திரப்
படுத்தவும், நெருப்பின்றி ஜலத்தை நக் கொதிக்கவைக்கவும் மூலி
காப்ரயோகங்களினால் ஜல ஜந்துக்களைக்காணும் கண்ணாடி தயாரித்
தலும் தூர விசாரணைச்ரவணங்களுக்காகக் கற்களை உபயோகித்த
லும் கொடி, செடிகளின் மூலம் பாலம் வகையராக்களைக் கட்டுத
லும் மற்றும் பற்பலப் பிரயோகங்களும் ஆயுர்வேத முறைகளாய்க்
கூறப்பட்டு இப்பொழுதும் திபத்என்ற தேசத்தில் அனுஷ்டானத்
திலிருப்பதாகவும் இவ்வித முறைகளைக்காண்பித்துள்ள வடமொழிச்
சுவடிகள் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஓர் கிராமத்தில் இப்ராஹிம்
வம்சத்தாரின் நூல் நிலயத்தில் பத்திரப்படுத்தி யிருப்பதாய் கேள்
விப்படுகிறோம்.

இவ்விப்ராஹிம் என்பவர் அராபிகளினின்றும் தம்பெரிய நூல் நிலையத்தைஅழிக்க விடாது காப்பாற்றிக்கொள்ளக் கடைசி பாகத்தன் பிராம்மணத்தன்மையை விட்டு இஸ்லாத்தைத் தழுவினவர் ஆவார் என்பதினால் ஷியார் தன்னைக்கெடுத்தும் நூல் களைக்காப்பாற்றின ஆயுர்வேதப் பிரியவராவார். முற்காலத்து ஜீவானந்தர் என்றும் ஓர் வைத்ய புத்தர்தான் தற்செயலாய்க் கண் ணுற்ற ஓர் மரக்கட்டையின் மூலம் (ஓர் மூலிகைக்கட்டை) இந்நாட் களில் நடத்திவரும் எக்ஸரேயின் வேலைகளைக் கடைசிகாலம் வரை யில் செய்துவந்துள்ளார் என்பது சரித்திர விளக்கமாம். பின்னும் யோஜிப்பின் தற்போதைய உலக மஹா யுத்தத்தில் நடத்தப்பட்டு வரும் விஷவாயுப்ரயோகம், விஷக்ரிமிப்ரயோகம் முதலியவற்றின் யோகங்கள் பல சுமார் 2000 வருடங்களுக்கு முன்னேற்படுத்தப் பட்டுள்ள கௌடில்ய நீதியின் அனுபந்தத்தில் காண்பிக்கப்பட்டுள் ளன. உதாரணமாக தண்ணீர்விட்டான் அரளி, களிமண் சுரைத்தண்டு முதலியவைகளின் யோகம் காற்றில் கிளப்பி விட பட்டவர்கள் மரணமடைவார்களாம். விஷக்கிருமிகளைத்தயாரித்த னுப்புவதால் குஷ்டம், ஜ்வரம், காஸம், வாந்தி முதலியன வேற் படுமாம். கண்ணீர் வடிக்கவும், கண்களைக் கெடுக்கவும் பைத்தி யம்பிடிக்கவும் யோகங்கள் உள்ளன. ஜனங்களைச்சூழ நெருப்பைக் கிளப்பவும், அன்னபானாதிகளைக் கெடுக்கவும் பலப்பிரயோகங்கள் காண்கின்றன. இதுகளைப்போல் கைக்குமேல் பயன் தரக்கூடிய மந்திரங்கள் பலவும் போதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிற்கும் பரிஹாரமாக முறைகளும் நிறுவப்பட்டிருப்பதோடு தனிமையாக வும் ஸமுதாயமாகவும் எதிரிகளின் ப்ரயோகங்களினின்றும் தப்பித் துக்கொள்ள உள்ளும் புறமும் பரிஹார வழிகளையும் எச்சரித்திருப் பதுபோன்றவைகள் ஆயுர்வேதப் பெருமையைக் காண்பிக்கின்றன வல்லவா. பல நாட்களில் ஆஹாரமில்லாதிருக்கப் பிரயோகங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன. அப்பேற்பட்ட இவ்வாயுர்வேதத்தை அத: பாதாளத்தை விட்டு மேலே எழுப்பும் பொறுப்பு விசேஷமாக இச்சபைத்தலைவர்கள்போன்றபல பெரியோர்களின் உடல், பொருள் ஆவிகளின் முழு பலத்தைப் பொறுத்ததாகு மென்பதோடு ஊர் மக்களும் ஒன்றுசேரவேண்டும் இவ்வளவோடு வளர்ச்சியை நித்து நிவிடுகிறேன்.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒப்புயர் வற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக பஸ்மம், வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்றும் அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயருடன் வெகு காலமாக அனுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து க்ஷய நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில மாதங்களுக்குள் பூர்ண சுகத்தை யளிக்கின்றது. 4, அல்லது 5 மாதங்களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்துடன் சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லேகியத்தை அனுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | | |
|---|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து. | விலை ரூ. | 10 |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை | ஷை விலை ரூ. | 20 |
| நாகபலா லேகியம் | ஷை | ஷை விலை ரூ. | 5 |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்டு வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை. பாதாம்பருப்பு, சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடிய காய்கறிகள் முதலியன புஷ்டியாகச் சேர்த்துக் கொள்ளவும். சற்று காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பிறகு தைல ஸ்நானம் செய்யலாம்.

குறிப்பு:— மருந்தைப் பரீக்ஷை செய்ய விரும்பும் வைத்தியர்களுக்கு மாத்திரம் க்ஷயாந்தக ரஸம் (ஸ்வர்ண சிந்தூர மில்லாமல்) பாதிவிலைக்குக் கொடுக்கப்படும்.


விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்.

2, நீர் போலிஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

பில்வவேர், ஓமம், வகைக்குத்தோலா நான்கு இடித்துப் பொடி செய்து அதில் பசுநெய் சின்னப்படி இரண்டு, புளியாரை ரஸம் சின்னப்படி எட்டு, பசும்தயிர் சின்னப்படி எட்டு, சேர்த்துக்கிருத பதமாகக்காய்ச்சி வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சு சாப்பிட்டு வர பசி தீபனமுண்டாம்.

225. பஞ்சகோலகிருதம்:—திப்பிலி, தேசாவரம், செவ்வியம், கொடுவேலி, சுக்கு, வகைக்குத்தோலா நான்கு இடித்துப்பொடி செய்து பசுநெய் சின்னப்படி இரண்டு, பசம்பால் சின்னப்படி எட்டு சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சி வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சுவீதம் சாப்பிட்டுவர அக்னி தீபனமாகும்.

226. கோரோசனைக்குளிகை:-கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் ரஸ சிந்தூரம், ரஸகற்பூரம், ஏலம், அப்பிரகசிந்தூரம் கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கிரகாரம், வகைக்குத்தோலா, மூன்று எடுத்து சந்தனக்கஷாயத்தில் நான்கு யாமமும் சண்பகப்பூ கஷாயத்தில இரண்டு யாமமும், குங்குமப்பூகஷாயத்தில்இரண்டுயாமமும் அரைத்துக் குன்றியளவு உருண்டைசெய்து நிழலில்உலர்த்தித் தகுந்த அனுபானத்திலிட கபரோய்கள், தொண்டைக்கட்டு, சன்னி, வலிப்பு, இசிவு, மாந்தம், காய்ச்சல், முதலியன தீரும்.

227. கந்தகமெழுகு:—சுத்திசெய்த இருபதுதோலா நெல்லிக்காய் கந்தகத்தைப் பொடிசெய்து ஓர் அகன்ற இரும்புச்சட்டியிலிட்டு அடுப்பேற்றி தீபம்போல எரித்து ஓர் இரும்புக்குச்சியால் கிண்டிக்கொடுத்து கந்தகம் தைலம்போல உருகிவரும் சமயத்தில் இருபது தோலா தேனைச்சிறுகவிட்டுக் கிளரிக்கொடுத்து அதில் சுத்திசெய்த வீரம், பூரம், ரஸம், வகைக்குத்தோலா 12 பொடி செய்து அதையும் இருபதுதோலா தேனையும் சிறுகச்சிறுக முன் போலவிட்டு ஓயாமல் கிண்டிக்கொடுக்கவும்; மருந்து பொங்கினால் ஆறவைத்து மறுபடியும் எரித்துக் கிண்டிக்கொடுக்கவும். மெழு கானபின் சிவந்த பதத்தில் ஆற்றிச் சிமிழில் அடைத்துக் கொண்டு தேற்றும்விதைப் பிரமாணம் வெல்லத்தில் பொதித்து நாளொன்றுக்கு இருவேளை வீதம் மூன்றுநாள் ஆறுவேளை உள்ளு

க்குக்கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி, கள்ளுபடி. பசும்பால் சாதம் நெய் சேர்க்கலாம். மருந்து இல்லாமல் மறு மூன்றுநாள் முன்சொன்ன பத்தியத்துடன் இருக்கவும். ஏழாவது நாள் வென்னீரில் ஸ்நானம்செய்யவும். ஒன்பதாம் நாள் பால்மிளகு தேய்த்து ஸ்நானம் செய்யவும். இளம்பிள்ளை வாதம், பார்சுவவாதம், யோனிப்புத்து, லிங்கப்புத்து, மேகநோய், ஆறாத புண்கள், விரணங்கள் முதலியன தீரும். சிலருக்கு இம்மருந்து வாய் பிடிக்கும்.

228. வாஸிஷ்ட ரஸாயனம்:—தசமூலம், குருந்தொட்டி, மருவ்வேர், மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி, யானைத்திப்பிலி, மலைதாங்கிவேர், அமுக்கரா, காயுருவி, பூனைக்காலி, அதிவிடயம், சீந்திற்கொடி, பில்வப்பிஞ்சு, சிவதை, தந்திவேர், கொடுவேலித்தழை, காகோலீ, வெப்பாலைப்பட்டை, ஹிம்ஸ்ரா, வேங்கையின் புஷ்பமும், கட்டையின் உள்பாகமும், கொட்டைக்கரந்தை, கல்பாசி, சேங்கொட்டை, நறுவிளி, தண்ணீர்விட்டான், முள் புங்கை, கொன்றை, கார்போகவரிசி, மருதாணி, முருங்கை, வேப்பம்பட்டை, நீர்முள்ளி, இவை வகைக்குத்தோலா நான்கு இடித்து ஓர் பானையில் போட்டு, கடுக்காய் 1100, யவதானியம் 512 தோலா சேர்த்து ஜலம் சின்னப்படி 410 விட்டு 50 படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அந்தக்கஷாயத்தில் அந்தக்கடுக்காய்களையும் சர்க்கரை தோலா 400 சேர்த்து அடுப்பேற்றி நல்லெண்ணை, நெய், நெல்லிக்காய் ரஸம், வகைக்குச் சின்னப்படி இரண்டு சேர்த்து இளம் பாகுபதத்தில் எடுத்து ஆறின பிறகு தேன் சின்னப்படி நான்கு சேர்த்துத் திப்பிலி தோலா 16, திரிஜாதம்வகைக்குத்தோலா நான்கு, இவைகளைப் பொடிசெய்து போட்டு தானிய புடம் ஒரு மாதம் வைத்திருந்து பிறகு எடுத்து தினம் சரீரபலத்திற்குத்தக்க விதமாக ஒன்று அல்லது இரண்டு கடுக்காயும் இரண்டு தோலா லேகியமும் சாப்பிட்டுவர பஞ்சகாஸங்கள், க்ஷயம் தீரும்.

229. நாரஸிம்ஹ ரஸாயனம்:—கருங்காலி வைரம், கொடுவேலி வேர், கோதகத்தி (இதுவே ஆச்சாமரமென சிலவிடங்களில் அழைக்கப்படுகிறது) வேங்கை வைரம், கடுக்காய், வாய்விளங்கம், தான்றிக்காய் [illegible], இவைவகைக்குத்தோலா $7\frac{1}{2}$ இடித்து

ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு அதில் இரும்புத்தகடுதோலா $7\frac{1}{4}$ ஜலம் சின்னப்படி 18 விட்டு சூரியவெப்பத்தில் மூன்றுநாள்வைத்திருந்து பிறகு அடுப்பேற்றி சிறு தீயிட்டு எரித்து $4\frac{1}{2}$ படியாக வற்றவைத்துக்கஷாயஞ்செய்து வடிகட்டி அதில் பசும்பால் சின்னப்படி $4\frac{1}{2}$ கரிப்பான் ரஸம் சின்னப்படி 9 திரிபலை கஷாயம் சின்னப்படி $13\frac{1}{2}$ (திரிபலை வகைக்குத்தோலா 144 இடித்து ஓர்பானையில்போட்டு சின்னப்படி 54 விட்டு $13\frac{1}{2}$ படியாக வற்றவைத்துக்கஷாயம்செய்து கொள்ளவும்) வெண்ணை சின்னப்படி 18 சேர்த்து ஓர் இரும்புப்பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி கிருதபதமாக வடித்து அதில் சர்க்கரை அல்லது தேன சேர்த்தும் அல்லது தனி கிருதமாகவும் சாப்பிட சரீரம் புஷ்டியாகும். வியாதிகள் அணுகா. புத்தி தீக்ஷ்ணமாகும். தாதுபுஷ்டியுண்டாகும்.

230, பூதிகரஞ்ஜாஸவம் — முள் புங்கை (குறிப்பு—புங்கை மரத்தில் இருவகையுண்டு. அவற்றுள் முள் புங்கை அல்லது மணிப்புங்கை என்று அழைக்கப்படும் ஓர் வகையுண்டு. மலையாள பாஷையில் ஆவில் என்கின்றனர்) மரத்தின்பட்டை தோலா 800 எடுத்து இடித்து அதில் ஜலம் சின்னப்படி 32 விட்டுஎட்டுப்படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி ஓர் பானையில் போட்டு சர்க்கரை தோலா 320, திரிகடுப்பொடி வகைக்குத்தோலா 11 சேர்த்து வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி தினம் வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் இரு வேளை கொள்ள மூல நோய் தீரும். அக்னிபலம் விருத்தியாகும்.

231. பூதிகரஞ்ஜாஸவம்:-முள் புங்கைப்பட்டை தோலா 400 கொடுவேலிவேர், கண்டங்கத்திரி வேர், வகைக்குத்தோலா 400, இவைகளை இடித்து ஜலம் சின்னப்படி 96 விட்டு 24 படியாக வற்றவைத்துக் கஷாயஞ்செய்து வடிகட்டி அதில் சர்க்கரை தோலா 400 திரிஜாதம், திரிகடு, தேசாவரம், மாதளைத்தோல், சிறுபீளைவேர், குக்கில், புஷ்கரமூலம், கொத்தமல்லி விதை, செவ்வியம், ஹபுஷா, இஞ்சி, புளிவஞ்சி, வகைக்குத்தோலா நான்கு இடித்துப் பொடி செய்துபோட்டு தேன் தோலா 80 விட்டு, பச்சை கொடிமுந்திரிப்

பழம், கொம்மட்டி மாதளை, கரும்புத்துண்டம், வகைக்குத்தோலா 40 சேர்த்து வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் தினம் இருவேளை சாப்பிட மூல நோய் நீங்கும். அக்னிசக்தி வலுக்கும்.

232. **மோபர லேஹியம்:**—ஜாதிபத்திரி, சிறு நாகப்பூ, இப்பிலி, வால்மிளகு, மஜ்ஜாபலம், விருத்தகாரகம், கட்பலம், நன்னாரி, அகில், வசம்பு, கோரைக்கிழங்கு, பூலாங்கிழங்கு, ருமிமஸ்தகி, சடாமாஞ்சி, இலவம்பிசின், காட்டாத்திப்பூ, கடுகுரோகிணி, சிறுநெரிஞ்சில் முள், வெந்தயம், தண்ணீர்விட்டான் கிழங்கு, பூனைக்காலி விதை, நீர்முள்ளி விதை, மூவிலை, ஊமத்தம் விதை, (மதனகாமப்பூ என்று சிலர்) தாமரைக்கிழங்கு, கோஷ்டம், கருநெய்தல் கிழங்கு, ஷெபூ, அதிமதுரம், சந்தனத்தூள், ஜாதிக்காய், மொதக்கன்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு, வாழைக்கிழங்கு, ஞாழல், ஜீவக ,ரிஷபகம், சுக்கு, மிளகு, திரிபலை, ஏலம், கருவாப்பட்டை, கொத்தமல்லிவிதை, சோப்சீனிக்கிழங்கு, சமுத்திரசோகிவிதை, அக்கிராகாரம், வெட்டிவேர், பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, குங்குமப்பூ, அப்பிரகச்சிந்தூரம், தங்கச்சிந்தூரம், வெள்ளிபஸ்மம், வெள்வங்கபஸ்ம , கருவங்கச்சிந்தூர , அயச்சிந்தூரம், வஜ்ரபஸ்மம், தாமிர பஸ்மம், முத்து பஸ்மம், ரஸ பஸ்மம், தாளகபஸ்மம், வகைக்குத்தோலா ஒன்று, கஞ்சாத்தழைதோலா 16, இவைகளை இடித்துப்பொடிசெய்து, சர்க்கரைதோலா 40-ல் சுவல்பஜலம்விட்டுச்சர்க்கரைகரைந்தவுடன் ஊற்றி அதில்இப்பொடியைப்போட்டுக்கிளரி தேன் தோலா 40 விட்டு நன்றாகக்கலந்து பத்திரப்படுத்தி தினம் வேளைக்குக்கால்தோலா சாப்பிட்டுவர தாது புஷ்டியுண்டாம். சகலநோய்களும் போம். குறிப்பு—இம்மருந்து யூனானி முறையிலிருந்து எடுக்கப்பட்டதாக பைஷஜ்ய ரத்னாவளியில் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மருந்தின் பெயரும் யூனானி வார்த்தையே. இம்மருந்தில் மொத்தச்சரக்குகள் சர்க்கரை தேன் நீங்கலாக 64 ஆகின்றன. இவற்றுள் பஸ்மசிந்தூரங்கள் மொத்தம் 11, இவைகள் நீங்கலாக மற்றச் சரக்குகள் 53ல் பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, குங்குமப்பூ நீங்கலாக மற்ற 50 சரக்குகளை இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவேண்டும். இந்த மூன்றையும்

சதுர்த்தி, காப்ரகுஞ்சம், ஷோடசி, பில்வம், என ஆறு பெயர்கள் உண்டு. இரண்டு பலம்கொண்டது ஓர் ப்ரஸிருதி. அதற்குப்ரஸிருதம் என வேறொரு பெயர் உண்டு. இரண்டு ப்ரஸிருதிகொண்டது ஓர் அஞ்சலி. இதற்குக்குடவம், அர்த்தசராவம், அர்த்தமானம் என மூன்று பெயர்கள் உண்டு. இரண்டு குடவம்கொண்டது ஓர் மானிகா. இதற்கு சராவம் எனப்பெயர் உண்டு. இந்த சராவம் எட்டுபலம் கொண்டதாகும். இரண்டு சராவம் கொண்டது ஓர் ப்ரஸ்தம். நான்கு ப்ரஸ்தம் ஓர் ஆடகம். இதற்கு பாஜனம் கம்ஸம், பாத்ரம், என வேறு பெயர்கள் உண்டு. இது 64 பலம் கொண்டதாகும். நான்கு ஆடகம் ஓர் துரோணம். இதற்குக் கலசம், நல்வணம், அர்மணம், உன்மானம், கடம், ராசி, என ஆறு பெயர்கள் உண்டு. இரண்டு துரோணம் ஓர் சூர்ப்பம். இதற்கு கும்பமென் வேறுபெயர் உண்டு. இது 64 சராவம் கொண்டதாகும். இரண்டு சூர்ப்பம் கொண்டது ஓர் துரோணி. இதற்கு வாஹம், கோணீ, என இரு பெயர்கள் உண்டு. நான்கு துரோணி கொண்டது ஓர் காரீ. இது 4096 பலம் கொண்டதாகும். இரண்டாயிரம் பலம் கொண்டது ஓர் பாரம். நூறுபலம் கொண்டது ஓர் துலாம். மாஷம், டங்கம், அக்ஷம், பில்வம், குடவம், ப்ரஸ்தம், ஆடகம், ராசி, கோணீ, காரீ, என்ற அளவுகள் வரிசையாக நான்கு மடங்கு அதிகமானவைகள். (அதாவது நான்கு மாஷம் ஓர் டங்கம் நான்கு டங்கம் ஓர் அக்ஷம், நான்கு அக்ஷம் ஓர் பில்வம் என இவ் விதமாக நான்கு மடங்கு அதிகமானவைகள். இது ஓர் மதாந்தரம்.) குன்றுமணிமுதல் குடவம் என்ற அளவு வரையில் பச்சை சரக்குகள் உலர்ந்த சரக்குகள் என்ற எல்லா சரக்குகளும் ஒரே அளவுள்ளதாகும், ப்ரஸ்தம் முதல் மேலுள்ள அளவுகளில் உலர்ந்த சரக்குகள் அதே அளவாகும். பச்சை சரக்குகளோ இருமடங்காக எடுத்துக்கொள்ளவேண்டும். (அதாவது சுக்கு ஓர் ப்ரஸ்தமென்றால் அது 16 பலமாகும். ஏனென்றால் சுக்கு என்பது உலர்ந்த சரக்கு. நெய் ஓர் ப்ரஸ்தமென்றால் அது இரு மடங்காக எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது 32 பலமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு பல மதங்கள் உண்டு. ஆகவே இது ஒரு பக்ஷமாகும்.) துலாம் முதலான அளவுகளில் பச்சை சரக்குகளுக்கு

இரட்டிப்பு அளவு கிடையாது. நான்கு அங்குல உயரம் அகல முள்ள ஓர் பாத்திரம் (மண், மூங்கில், உலோகம், மரம், இவற்றுள் எந்த வஸ்துவால் செய்யப்பட்டிருந்தாலும் சரி) குடவமாகும். மருந்து ஜாபிதாவில் தலைப்பில் காணப்படும் சரக்குகளைக்கொண்டு அந்த மருந்துகளுக்குப் பெயர் கொடுக்கப்படும். இனி கலிங்க பரிபாஷை, நோயாளிக்குக்கொடுக்கப்படும் மருந்துகளுக்கு அளவை நிர்ணயிக்கமுடியாது. நோயாளியின் வயது, பலம், ஜீரணசக்தி, திரி தோஷப்பிரகோபதாரதம்யம், தேசம் அதாவது நோயாளிவசிக்கும் தேசம், காலம் (அதாவது வெய்யில்காலம், மழைகாலம், பனிகாலம், என்பன) இவைகளை அநுசரித்து மருந்துகளின் அளவை வைத்தி யன் நிர்ணயிக்கவேண்டும், கலியுகத்தில் மனிதர்கள் அக்னிபலம் குறைந்தும் மன உறுதி குறைந்தும் இருப்பதால் அதற்குத்தகுந் தாப்போல பண்டிதர்கள் அங்கீகரித்துள்ள கலிங்க அளவைச்சொல் லுகிறோம். 12 ஸர்ஷபம் கொண்டது ஓர் யவம். இரண்டு யவம் ஓர் குஞ்ஜா. மூன்று குஞ்ஜா ஓர் வல்லம். எழு அல்லது எட்டு குஞ்ஜா கொண்டது ஓர் மாஷம். நான்கு மாஷம் ஓர் சாணம். அதற்கு நிஷ்கம், டங்கம், என இரு பெயர்கள். ஆறு மாஷம் ஓர் கத்யாணம். பத்துமாஷம் கொண்டது ஓர் கர்ஷம். நான்கு கர்ஷம் ஓர் பலம். அது பத்து சாணம் கொண்டதாகும் நான்குபலம் ஓர் குடவம். பிரஸ்தம் முதலியன மாகத பரிபாஷையில் சொல்லப் பட்டவை போலவே.

தான்யம், பழம், கிழங்கு, கீரை, இவைகளின் குணங்கள்— குறிப்பு—இந்தத் தலைப்பில் நித்யப்படி ஆஹாரத்திற்குத் தேவையான வஸ்துக்களின் குணங்கள் சொல்லப்படுகின்றன. வாசகர்களின் சௌகரியத்தைக்கருதி வடமொழிப்பெயரும், அதற் குத்தமிழ் பெயரும் எழுதுவோம். தமிழ்வார்த்தை தெரியாத இடங்களில் ஹிந்துஸ்தானி பெயர் கொடுக்கப்படும். அதுவும் தெரியாத சொற்களுக்கு வடமொழிப்பெயர் மாத்திரம் கொடுக்கப் படும். (வடமொழி) சாலி (தமிழ்) நெல். வெளுப்பாகவும், சிகப்பா கவும், மெல்லியதாகவும், பருமனாகவும் இருக்கும் நெல் ஆகாரத் திற்கு நல்லது. அதன் குணம்—தித்திப்பான, ரஸமும், விபாக

மும் உள்ளவை. (குறிப்பு— வஸ்துக்கள் நாவில்பட்டவுடன் பெரும்பான்மையாக உணரப்படும் சுவை ரஸமாகும். ஜீரணமாகி ரக்தத்தில் கலக்கும் நிலைமையில் நூல்களால் மாத்திரம் அறியப்படும் சுவை விபாகமாகும். வஸ்துக்கள் நாவில்பட்டபிறகு அவ்யக்தமாகவும் முடிவிலும் உணரப்படும் சுவை அநுரஸமாகும்.) எண்ணெய்ப்பசையுள்ளவை. தாதுபுஷ்டியை யளிப்பவை, மலபந்தம், சுவல்பமலம், துவர்ப்பு அநுரஸம், இலகு, மூத்ரவிருத்தி, குளிர்ச்சி, ஆகிய குணமுள்ளவை. பலவிதமான நெல் இனங்களில் ஷஷ்டிகா, சாலம், என்பவை உயர்ந்தவையாகும். யவம் குறிப்பு—இது வடதேசத்தில் யவம் என்ற பெயருடன் ஏராளமாகக்கிடைக்கின்றது. தான் வந்தரதைலம், அகஸ்த்யரஸாயனம் போன்ற மருந்துகளில் இது கூட்டுச்சரக்காகச் சேருகின்றது. மதுமேகம் முதலியவைகளில் ஆகாரவஸ்துவாகவும் சொல்லப்பட்டுள்ளது இதற்குத் தமிழ் பெயர் கிடையாது. தமிழ்நாட்டில் விளைவும் கிடையாது. பார்லி என்பனபோன்ற தானியங்கள் யவமாகாது. இதன் குணம்—பசையற்றது. சீதம், குரு, தித்திப்பு, சரீரத்தில் பரவும் தன்மை, அதிக மலம், அதிக வாயு, ஆகிய இக்குணமுள்ளது. கோதுமை. இது சகலருமறிந்ததே. பிரிந்த அவயவங்களைச் சேர்த்தல், தித்திப்பு, உறுதியளித்தல், சரீரத்தில் பரவுதல், ஆகிய இக்குணங்கள் இதற்கு உண்டு. யுகந்தாம் இதற்குத் தமிழ்ப்பெயர் கிடையாது. வடதேசத்தில் கிடைக்கின்றது. ஜோந்தலே என மகாராஷ்டிரப்பெயர். திரிதோஷங்களுக்கும் நல்லது. தித்திப்பானது. முத்கம்=பாசிப்பயறு. ஆடகீ=துவரை, மஸூரம்=தட்டைப்பயறு, இவைகளும் இவைபோன்ற சிம்பீதானியங்களும் விபந்தம் செய்யும். (விபந்தமென்றால் அடைத்தல் எனப் பொருள். அதாவது குழாய்கள் தடைபடுதல் முதலியவை) துவர்ப்புரஸம், தித்திப்பு, மலபந்தம், காரமான விபாகம், குளிர்ச்சி, லகு, குணமுள்ளவை. மேதஸ், கபம், ரக்தபித்தம், இந்த நோய்களில் மேல் பூச்சுக்கும் தாரைக்கும் உபயோகப்படும். பாசிப்பயறு—சோதனம் செய்துகொண்டவர்கள் (நிரூஹம், வமனம், விரேசனம், சிரோ விரேசனம், ரக்தத்தை வெளிப்படுத்துதல், என்ப

வைச் சோதனமாகும்) விரணங்கள் கண்டரோகங்கள் நேத்திர ரோகங்கள் இவைகளுக்கு நல்லது. குலுத்தம்=கொள்ளு இது பலருமறிந்ததே. இதைக்காணம் என்று சில விடங்களில் சொல்லுவார்கள். இது வாயுவை அநுலோமப்படுத்தும். குன்மம், தூனி, ப்ரதூனி, என்ற நோய்களுக்கு நல்லது. சிம்பீதான்யங்களுள் பாசிப்பயறு உயர்ந்தது. கலாயம் என்பது இளப்பம். முந்தியது அல்பமான வாயுவையுண்டுபண்ணும் பிந்தியது மிகுந்த வாயுவையுண்டுபண்ணும். சணகம்=கொத்துக்கடலை. இது பலருமறிந்ததே. இது வாயுவைச்செய்யும். வாஸ்துகம்=சக்ரவர்த்திக்கீரை, இது காஞ்சீபுரம் பக்கங்களில கிடைக்கும். சென்னை கொத்தவால் சாவடியில் சாதாரணமாக, இப்பெயருடன் கிடைக்கிறது. இது கீரைவகையைச் சேர்ந்தது. கிரஹணீ, குஷ்டம், மூலம், திரிதோஷங்கள், இவைகளுக்கு நல்லது. சரீரத்தில் பரவும் குணமுள்ளது. சில்லி. இதற்குத்தமிழில் பெயர் தெரியவில்லை. காகமாசீ=மணத்தக்காளி (இதை மிளகுதக்காளி என்றும் சொல்லுவார்) மேதிகா=வெந்தயம் கீரை. இவை மூன்றும் வாஸ்துகம் போன்ற குணமுள்ளவை. தண்டுலீயம்=சிறுக்கீரை, இது சீதம், ரூக்ஷம், (அதாவது எண்ணைப்பசையற்றது) வாதம், ரக்தபித்தம், காஸம், இந்த நோய்களுக்கு நல்லது. சாங்கேரி=புளியாரை, கபநோய், ரக்தவாதம், கிரஹணீ, இந்த நோய்களுக்கு நல்லது. படோல=புடல். இது ஹிருதயத்திற்கு நல்லது கிருமிஹரம், சீதம், தித்திப்பு, அரோசகம், புடலம் தழை—பித்தஹரம், புடலம் தண்டு—கபஹரம், புடலங்காய்—திரிதோஷங்களுக்கு நல்லது. புடலம்வேர்—பேதியாகும் குணமுள்ளது. பிருஹதீத்வயம்=முள்ளியும், கண்டங்கத்திரியும், இந்த இரண்டு இனத்தையும் ஒன்றாகவே சேர்த்து நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் கண்டங்கத்திரி என்பது சாதாரணமாக எல்லாருமறிந்ததே இதன் காய் சமையலுக்கு உதவுகின்றது. இது கொடியினம். முள்ளி என்பது செடி இதன் காய்கள் கண்டங்கத்திரிக்காய்கள் போலவேயிருக்கும். இது கத்தரியினத்தைச்சேர்ந்ததென பார்வைக்குப் புலப்படும். இதன் காய்கள் சமயலுக்கு உதவுகின்றன. இது சற்று துர்லபமாகக் கிடைக்கும். இவ்விரண்டு இனங்களின்வேரும் தச

மூலத்தில் சேருகின்றன. இவைகளின் குணங்கள்—பித்தம் செய்யும், தீபனம் செய்யும், மலத்தை இளகச்செய்யும், வாதஹரம். கார்வேல்லம் = பாகல், இதில் தத்காலம் இருவகை காணப்படுகின்றன. மிதிபாகல் என்றும் நீளப்பாகல் என்றும் அவைகள் அழைக்கப்படுகின்றன. இதில் நீளப்பாகல் இங்கு சொல்லப்படுகின்றது. கசப்பு, தீபனம், கபஹரம், என்ற குணங்கள் இதற்கு உண்டு. கர்கோடகம், இதற்குத் தமிழ்ப்பெயர் தெரியவில்லை. ஜ்வரம், சுவாஸம், படை, குஷ்டம், விஷம், இவைகளுக்கு நல்லது. வார்தாகம் = கத்தரிக்காய், கபம், வாயு, இவைகளுக்கு நல்லது. கொஞ்சம் பித்தப்ரகோபம் செய்யும், ஸர்வாங்கங்களிலும் வியாபிக்கும். மூத்திரம் விருத்திசெய்யும். பலத்தைக் கொடுக்கும். இவ்வளவு குணங்களும் இளம் பிஞ்சுகளுக்கே. பேண்டீ = வெண்டை, புளிப்புரஸம் உஷ்ணம், மலபந்த , ஆமோசகஹரம், என்ற குணங்களையுடையது. பிம்பீபலம் = கோவைப்பழம், சிதம், தித்திப்பு, விரைப்பு, குருகுணமுள்ளது. ரக்தபித்தம், எரிச்சல், விககம் என்ற நோய்களுக்கு நல்லது. வாயு வயிற்றுப்பொருமல், விபந்தம், இவைகளைச் செய்யும். கூச்மாண்டம்—சாம்பல்பூசணி, இதின் குணம், புஷ்டியைக்கொடுக்கும். சீதம், குரு, குணமுள்ளது. ரக்தபித்தம், வாயு, இவைகளைப்போக்கடிக்கும். இளம்பிஞ்சு பித்தஹரம், சீதளம், ஆகிய குணமுள்ளது. நடுத்தரக்காய் கபம் செய்யும். பழுத்தகாய் மிகக் குளிர்ச்சி குணமில்லாதது, தித்திப்பாகவும், லகுதீபனம், சரீரம் முழுவதும் வியாபித்தல் என்ற குணங்களும் உள்ளது. மூத்திரப்பையை சுத்திசெய்யும். பைத்தியம் முதலிய மனோவிகாரங்கள் திரிதோஷங்கள் இவைகளில் நன்மைசெய்யும். மிஷ்டதும்பீபலம் = நல்ல சுரக்காய். இதன் குணங்கள்—தாதுபுஷ்டியைச் செய்யும். கபபித்தஹரம், இலகுவானது. கடுதும்பீ = கசப்புச்சுரை, குளிர்ச்சியானது. ஹிருதயத்திற்கு நல்லது, பித்தம், காஸம், கபம், இவைகளுக்கு நல்லது. த்ரபுஸம்—வெள்ளரிபேதம், மூத்திர விருத்தி, குளிர்ச்சி, ரூக்ஷம், என்ற குணமுள்ளது. ரக்தபித்தம், நீர்கடுப்பு, இவைகளுக்கு நல்லது. பழம்—உஷ்ணம், புளிப்பு. பித்தகரம், கபவாதஹரம், என்ற குணமுள்ளது. கோசாதகீ—பீர்க்கு.

கசப்பு, ரூக்ஷம், ஆமாசயத்தைச் சுத்திசெய்யும், குணமுள்ளது.
வீக்கம், பாண்டு, மகோதரம், ப்லீஹா, குஷ்டம், மூலம், கண் ரோகம்,
பித்தரோகம், இந்த ரோய்களில் குணம் கொடுக்கும். அதன் இலை
யின் குணம்—மலத்தை இளக்கும், சீதம், லகு, குணமுள்ளது.
மேகரோகங்களுக்கு நல்லது. சதபுஷ்பா சதகுப்பை காரம், ஸ்நிக்
தம், கசப்பு, உஷ்ணம், குணமுள்ளது. கபவாதஹரம் அரோசக
ஹரம், மூத்திரப்பைக்கு நல்லது. கண்களுக்கு ஹிதம். மலபந்தம்
செய்யும். கிருமிகளையும் சுக்லபலத்தையும் போக்கும் சக்ரவர்த்தி—
சக்ரவர்த்தி முன்சொன்னவாஸ்துகக்கீரையின் குணமுள்ளது. (வாஸ்
துகம் என்பதும் சக்ரவர்த்தி என்பதும் ஒரே இனம் சுவல்பபேத
முள்ளது) ஸர்ஷபம்=கடுகு. இந்தக்கீரையின் குணமாவது—
கண்களுக்கு ஆகாது. எரிச்சலைக்கொடுக்கும். ருசியை யளிக்கும்
மலபந்தம் மூத்ரபந்தம் இவைகளைச்செய்யும். குரு, உஷ்ணம், இந்த
குணமுள்ளது. குஸும்பா—ரூக்ஷம், உஷ்ணம், கபஹரம், தித்திப்
பானது, பித்தம் செய்யும், இலகுவானது. கோத்துக்கடலைக்கீரை
—ஜரிப்பது கடினம். கபவாதங்கள் செய்யும். சிக்ரு—முருங்கை
தீக்ஷ்ணம், லகு, மலபந்தம் செய்யும். அக்னிபலம் கொடுக்கும். கப
வாதஹரம், உஷ்ணம், வித்ரதி, ப்லீஹா, விரணம், அம்லபித்தம்
இவைகளுக்கு நல்லது. மதுசிக்ரு—சிகப்பு முருங்கை, காரம் கசப்
பானது, வீக்கத்திற்கு நல்லது, தீபனம் ஸர்வாங்கவியாபி, அதன்
இலை—வாதபித்தஹரம், குரு, அல்ப துவர்ப்புள்ளது, கண்களுக்கு
நல்லது, சீதளம், தித்திப்பானது. அதன் புஷ்பம்... தித்திப்பானது,
கபபித்தஹரம், குரு, அல்ப துவர்ப்புள்ளது, மலபந்தம் செய்யும்,
கண்களுக்கு நல்லது, கிருமிகளைப்போக்கும். முருங்கைக்காய் தித்
திப்பானது, துவர்ப்புமுள்ளது, கபபித்தஹரம், சூலம்,
குஷ்டம், க்ஷயம், சுவாஸம், குன்மம், இவைகளைப் போ
க்கும். ஸர்வாங்கவியாபி. குஸ்தும்பரீ—கொத்தமல்லி (பச்
சையான கீரை) தித்திப்பானது, நல்ல வாசனை மனோரம்யம் இவை
களைக்கொடுக்கும். உலர்ந்தது—பசையுள்ளது, விபாகம் தித்திப்
பாக இருக்கும், துவர்ப்பு, காரம், லகு, என்ற குணமுள்ளது.— கத
லீகுஸுமம்—வாழைப்பூ, கசப்பு, துவர்ப்பானது, மலபந்தமும்
தீபனமும் செய்யும். உஷ்ணமானது, கபஹரம், மலாரத அதாவது

ஈசானமடலுக்கும் அதே குணம், அகஸ்த்யபுஷ்பம்—அகத்திப்பூ குளிர்ச்சி குணமுள்ளது, நான்காம்முறைக்காச்சலுக்கு நல்லது, இரவில் கண்தெரியாமலிருக்கும் கண்ணோய் (அதாவது ராத்திரிகாமாலை என்பர்) நீக்கும், கபஹரம், தீபனம். அகஸ்த்ய சிம்பம்—அகத்திக்காய், புஷ்பத்திற்குச்சொன்ன குணம் இதற்குமுண்டு. சதபத்ரீ. இதற்குத் தமிழ்தெரியவில்லை. முட்டைகோஸ் என்ற பூவெனச் சிலர் நினைக்கின்றனர். தருணீ, கர்ணிகா, சாருகேஸரா, ஸஹா குமாரீ, கந்தாட்யா, லாக்ஷாபுஷ்பா, அதிமஞ்ஜுலா, என ஏழுபெயர்கள் இதற்கு உண்டு. இதன் குணம்—குளிர்ச்சியானது, ஹிருதயத்திற்கு நல்லது. மலபந்தம் செய்யும், சுக்லத்தை விருத்திசெய்யும். லகுவானது, திரிதோஷங்களுக்கும் ரத்தத்தை யொட்டிய நோய்க்கும் நல்லது, நிறம்கொடுக்கும், கசப்பும் காரமுள்ளது, பாசனம் குணமுள்ளது. மூலகம்—முள்ளங்கி, இளம் முள்ளங்கிக் கிழங்கு உஷ்ணவீர்யம், ருசிகொடுக்கும், இலகு, பாசனகுணமுள்ளது. முற்றின முள்ளங்கி— ரூக்ஷம், உஷ்ணம், குரு, திரிதோஷங்களைச்செய்யும். ஸூரணம்—கருணைக்கிழங்கு, ரூக்ஷம், தீபனம், கபம், மூலம், கிருமிநோய், இவைகளுக்கு நல்லது, லகுவானது. காட்டுக்கருணைக்கிழங்கு—விசேஷித்து கபஹரம், ரக்தபித்தநோயைக்கொடுக்கும். கர்ஜரம்—கேரட் கிழங்கு, (carrot) இதற்குத் தமிழில் பெயர் கிடையாது. கேரட் என்பது ஆங்கிலப்பெயர். தமிழ்நாட்டில் தக்காலம் ஏராளமாகக் கிடைக்கின்றது. இதற்கு வடமொழியில் கிரிஞ்ஜனம் எனப்பெயர். தித்திப்பானது, தீக்ஷணம், உஷ்ணம், கசப்பானது, இலகு, தீபனம், மலபந்தம் செய்யும், ரக்தபித்தம், மூலம், கிரஹணீ, நோய்களுக்கு நல்லது. கபவாதஹரம். கதலீகந்தம் வாழைக்கிழங்கு, குளிர்ச்சியானது மலபந்தம் செய்யும், ரூக்ஷம், ரக்தபித்த நோய்க்கு நல்லது, அல்பதுவர்ப்புள்ளது, கபம் செய்யும், வாதம் செய்யும், பெரும்பாடு நோய்க்கு நல்லது, கௌரபாகுசீ—இதற்குத் தமிழில் பெயர் தெரியவில்லை, கசப்பானது, மகோதரத்தில் கெடுதல் செய்யும். கிரஹணி, மூலம், இந்நோய்களைப்போக்கும் க்ஷுபஜமரிசம்—சிறு மிளகாய், ருசியைக் கொடுக்கும், தோஷம் செய்யும், எல்லா வியாதிகளையும் உண்டுபண்ணும், பிரமேஹம், மூலம் இந்நோய்களில் விசேஷித்துக் கெடுதல்

செய்யும், க்ஷுபஜமஹாமரிசம்—பெரிய மிளகாய், முன்சொன்ன
குணங்கள் குறைவாக இருக்கும். கர்கடிகா—வெள்ளரிக்காயின்
ஓர் பேதம், ஆலுகம்—கிழங்கு, உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு
சேனைக்கிழங்கு, முதலிய கிழங்குகளுக்கு இது பொதுப்பெயர்.
(இதன் விவரம் இந்நூலில் செய்யப்படவில்லை. அஷ்டாங்க ஹிரு
தயம்போன்ற நூல்களில் காணப்படுகின்றது.) இவற்றின் பொது
வான குணங்கள்—கபம் செய்யும், தித்திப்பானது, இல , மலத்
தைப்போக்கும், பித்தஹரம், விளைந்த கிழங்குகள்—தித்திப்புளிப்,
புக்கலந்தது, ரத்தபித்தஹரம், சாகூடம்—தமிழ்பெயர் தெரியவில்லை.
இதில் வெளுப்பு, கறுப்பு, என இருவகையுண்டு, அதில் வெளுப்பு
—அக்னி தீபனம் செய்யும். ஸரம் (அதாவது ஸர்வாங்களிலும் பர
வும் குணமுள்ளது) மூலநோய், கிருமிகள், மேகம், இவைகளை நீக்
கும். கப பித்தஹரம் கறுப்பு—மூலநோய்க்கு நல்லது, மந்தாக்னி,
மலபந்தம், மூத்ரபந்தம், இவைகளை விலக்கும். திராக்ஷா—இதன்
பிஞ்சு—காரம், உஷ்ணம், குணமுள்ளது, நாக்கின் மாசுகளைநீக்கும்
ரக்தபித்த நோயைக்கொடுக்கும், நடுத்தரக்காய்—புளிப்பு, மற்றரஸ
மும் சேர்ந்திருக்கும், அரோசகம் நீங்கும், அக்னிபலம் கொடுக்கும்,
பழுத்தபழம்—தித்திப்பு, புளிப்புடன் கூடியது, தாகம், ரக்தபித்தம்
இவைகள் போம். உலர்ந்தபழம்—சிரமத்தை விலக்கும், புஷ்டி
யையும் தாதுபுஷ்டியையும் அளிக்கும், பக்வதிராக்ஷா—ஸரம்,
சீதம், கண்களுக்கு நல்லது, புஷ்டியைக்கொடுக்கும். குருவானது,
தாகம், சுரம், சுவாஸம், வாந்தி, வாதரக்தம், காமாலை, நீர்கடுப்பு,
ரக்தபித்தம், மயக்கம், எரிச்சல். மதாத்யயம் (அதாவது சாராயக்
குடியால் வரும் நோய்) க்ஷயம், இவைகளுக்கு நல்லது. பழுக்காத
திராக்ஷா, அல்ப குணமுள்ளது, குரு, புளிப்பு, ரக்தபித்தஹரம்.
குணமுள்ளது.—ஆம்ரம் = மாமரம், மலபந்தம் செய்யும், பிரமேகம்
ரக்ததோஷம், கபநோய், புண்கள், இவைகளுக்கு நல்லது. மாம்
பிஞ்சின் குணம்—மிகப்புளிப்பு, ரூக்ஷம். திரிதோஷங்களையும் செய்
யும். விதை உண்டான மாங்காயின் குணம்—பிஞ்சின் குணமுள்
ளது, வாதஹரம், பித்தம் செய்யும், பழத்தின் குணமாவது—தித்
திப்பானது, தாதுபுஷ்டியை யளிக்கும், பசையுள்ளது, ஹிருதயத்

# ஜீவானந்தம்.

(மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)

இரண்டொரு நூற்றாண்டுகளுக்குமுன் ஆனந்தராயதீக்ஷிதர் என்னும் பண்டிதரால் இயற்றப்பட்டதும் முழுவதும் வைத்ய ஸம்பந்தப்பட்டதுமான ஓர் நாடகம் இருக்கும், பொதுமக்கள் பெரும்பாலும் வைத்யர்களில் சிலரும் இதன் விஷயங்களை விளங்கியிருக்கமாட்டார்கள் என்று கருதி இதனை வைத்யசந்திரிகையில் வரைவது உசிதமாகுமென்று எண்ணுகிறேன். இதன் கதாநாயகன் ஜீவன் எனனும் அரசன் பரிவாரங்களுடன் எதிரிகளான க்ஷயம், பாண்டு, காஸம், விஷூசி முதலியோர்களினின்று தப்பித்துக் கொண்டு முதலில் நோயற்ற வாழ்வைப் பெறுவதே இக்கதையின் வரலாறாகும். அதிக வளர்த்தியைப்பயந்து ஸங்கிரக ரூபத்தில் வரலாறுகளை இதனடியில் காண்பிப்போம். ஜீவராஜனின் அமைச்சரில் ஒருவனான விக்ஞான சர்மா தங்களைக்கூட்டை (கோட்டை) விட்டு விரட்ட முழுப்பாடுபடும் க்ஷயராஜன் முதலிய எதிரிகளின் திட்டங்களைக் கேள்விப்பட்டு தாம் உயிருடனிருக்கையில் அவ்வெண்ணத்தை ஈடுபெறவிடமாட்டேன் என்று உறுதி அரசனிடம் சென்று எதிரிகளின் அலுவல்களை கவனித்துவர சாரர்களை அனுப்புதல் அவசியமாகுமென்றும் இக்காரியத்திற்காகத்தாரணை தான் அனுப்பப்பட வேண்டுமென்றும் நினைந்துவிடியற்காலமானபடியால் அரசன் புத்தியென்னும் அரசாணியுடன் விழித்திருக்கக்கூடுமாதலால் சந்தர்ப்பம் சரியானதென்று முன் செல்ல மத்தியில் செம்பட்டஜடையையும், விபூதியையும், காஷாயத்தையும் திருவோடு மயில்தோகைகளையும் தரித்துக்கொண்ட ஓர் பெண் சன்னியாஸி எதிர்ப்பட யாரென உற்றுப்பார்க்க தாரணையின் பல குறிப்புகள் காண முன்னறையிலே அரசனின் உத்திரவுப்படி காஷாயவேஷத்துடன் தாரணைசென்று எதிரிகளின் வரலாறுகளைத்தெரிந்து திரும்புவதாயிருக்கலாமென்று எண்ணி அவளிடம் அணுகச்செல்ல இதைக்கண்ட தாபஸி ஆஹா, அமைச்சன் எதிர்ப்படுகிறான் இவனை ஏமாற்றி அப்பால் செல்லவேண்டுமென விடாது நடக்கையில் அமைச்சன் வழிமறித்து, அம்மா, தாங்கள் யாரோ? எங்கிருந்து வருகின்றீர்களோ? எங்கு செல்கிறீர்களோ? வென வினவ அவ்வம்

மாளும் தன்னைக் காட்டிக்கொடுக்காதபடி தாம் யக்ஷமராஜனின் மனைவியான ரோஹணியின் அந்தரங்கத்தோழி அந்தப்புரத்தினின்றும் வருவதாய்க் கூறக்கேட்ட மந்திரி எனது அதிருஷ்ட வசமாய் தாங்கள் எதிர்ப்பட்டீர்கள் என்றுரைக்க மந்திரியினிடம் 'நீர் யார் எங்குச்செல்கின்றீர் உண்மையைக் கூறும்" என்று பெண் சாமியார் கேட்க எல்லாம் வல்ல ஸமாதி பலத்தினால் தெரிந்துகொள்ளும் திறமை நிறைந்த தாங்களே சொல்வீர்களென்று அமைச்சன் பதிலளிக்க தாரை ஸ்வஸ்திகாஸனம், சுவாஸபந்தனம் முதலிய யோக நிலைமைகளை நடித்துக்கடைசியாக "உணர்ந்தேன். ஜீவராஜனின் அமைச்சன் விஞ்ஞான சர்மாவன்றோ நீர் என்று கூற தங்களின் யோகத்திறமை ஆச்சரியப்படக் கூடியதென்று அமைச்சன் மொழிந்து தங்களைப்பற்றி எதிரிகள் என்ன நினைக்கிறார்கள் என்று கவனிப்பீர்கள் என்று கேட்க" வேறென்ன கோட்டையைவிட்டுவிரட்டவேண்டுமென்பதுதானென்றுபதிலளித்தாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் அமைச்சன்" அப்படியா, சாம தான பேத தண்டோபாயங்களின் வரிசைப்படியாக யக்ஷமராஜன் கொள்கைகளைமாற்ற இடமில்லையா" வென வினவ "ஒருங்காலும் முடியாதென மறுமொழியைக்கேட்ட மந்திரி இவள் பெண்புத்தியினால் பயந்தவளாக விருக்கிறாள் என்றெண்ணி வெளிப்படையாக "ஜீவனுக்கு மந்திரியாக நானிருக்கையில் எதிரியின் எண்ணம் ஈடேறுமென்பது இன்னாம்' என்று சொல்லக்கேட்டு தாரை ஐய்யா கவலைப்படாதீர்கள் உண்மையில் நான் புத்தியின் தோழி, நம்மரசனின் கட்டளைப்படி காஷாய வேஷத்துடன் இரவில எதிரிகளிடம் சென்று அவர்களின் நம்பிக்கையைப் பெற்று எல்லாவற்றையும் தெரிந்து அரசனிடம் திரும்பிச்செல்ல வழியில் எதிர்ப்பெற்ற தங்களை வஞ்சித்துச் செல்ல எண்ணிய தாரை நானே என்றதும் நியாயந்தான, நாமிருவரும் கலக்கமின்றி அரசனிடம் செல்வோமென்று அமைச்சன் மனம் கொள்ள "நீர் முன்னடியே விவரங்களை விளக்கிவிடுவீர், நான் துர்ஜன ஸம்ஸர்க்கக் கெடுதல்களைக் கழுவிவிட ஆற்றிற்குச் செல்கிறேனென்று தாரை அப்பால நகர அமைச்சன் அதிக்கக்கவலையுடன் துஷ்டர்களான எதிரிகள் தங்கள் அரசனுக்காக உயிரைத்தத்தம் செய்யசித்தமாயிருப்பினும் புத்திசாலித்தன்மையினால் அவர்களின் எண்ணங்களை வீண்படுத்தச்செய்யும் வேலைகளை நடத்திச்செல்ல

வல்லவனே அமைச்சன்ஸ்தானத்திற்குரியவனெனவெண்ணிச்சற்று சிந்தனைசெய்து "அறிந்தேன் அறிந்தேன்" பற்பல, திக்ஷ்ண, ஜடப்ரக்ருதிகளான வாதபித்த கபங்களை ஸ்னேஹம், இனிப்புகள், கடுமைத்தன்மைகளினால் வச்யப்படுத்துமாயின் ஸர்வரோக பிரதான பூதங்களான தோஷங்கள் சமனமடைவதால் எதிரிகள் வலுவடைய வழியிராது எனினும் என்னேரமும் சஞ்சலிப்புப்பெறும் மனதைக் காமக்ரோதாதிகளின் மூலமாக எதிரி ஜெயிக்கொள்ளக்கூடுமாதலால் பலவந்தமாக மனதையும் அடக்கிக்கொள்ளவேண்டும். அரசனிடம் நானில்லாதிருக்கையைப்பார்த்து என் விரோதி அஞ்ஞானசர்மா மித்திரபேதம் செய்துகொள்ளுவானாதலால் இது விஷயத்திலும் அதிக ஜாக்கிரதையாக விருத்தல் வேண்டும். அதாவது எவ்வழியிலாவது இவ்வனர்த்தங்களுக்கும் மூலமானயக்ஷ்மா ஸமூலம் துலைக்கப்படுவதே முடிவாகும். இதற்காக விரைந்து அரசனிடம் செல்ல வாசல்காக்கும் ப்ராணனிடம் தன்னை அரசனுக்குத் தெரிவிக்கச்செய்து உத்திரவுபெற்றதும் உட்புக எதிரில் அரச இராணிகள் அதிகக்கவலையுடனிருக்கக்கண்டு அமைச்சன் வந்தனமளித்தான். பின்னர் மந்திரி ஆஸனத்தைப்பெற்று அரசனைப்பார்த்து மஹாராஜனே, தாமஸை எக்காரியத்தையும் முடித்துவிட்டு விவரங்களை என்னிடமொப்புவித்து குளிக்கச் சென்றுள்ளான் என்று தெரிவிக்க விஷயமென்னவென்று அரசன் வினவ அந்தப் பயல் (யக்ஷ்மா) நம்மை எப்படியும் பட்டணத்தை விட்டு விரட்டத்திட்டம்போட்டுள்ளானும் என்று தெரிவிக்க ஆனால், என்னசெய்வோம் என்று அரச தம்பதிகள் பயப்படக் "கவலைப்படாதீர்கள் பரிஹார வழிகளையும் தாமஸை நன்கு உணர்ந்து வந்துள்ளான். (ரஸதந்த்ரங்களின் பிரயோகமன்னியில் தன் குலத்தோர் வெல்லப்பட முடியாதென எதிரி சொல்லிக் காட்டியதை) எனத் தேற்ற அப்படியானால் ரஸதந்த்ரங்களைக் கிட்டும்வழி யாதென அரசன் கேட்க ஈசுவர அம்பாள்களின் வரப்ரஸாதத்தைப்பெற்று அடையவேண்டுமென்று மந்திரி மறுமொழிந்தார். பின்னர் அரசனும் மந்திரியும் ஈசுவர தம்பதிகளின் பெருமைகளையும் கிருபா விசேஷங்களையும் அரசாணிக்குச் சொல்லிக்காட்டியபின் அவர்களின் அரு,

மைப்பெற புண்டரீகபுரமென்னும் இடத்தில் சிவபக்தியென்னும் தோழியின் உதவியுடன் தவம்செய்யின் எப்புருடார்த்தமும் கிட்டிவிடுமென்னுறுதியுடன் இராஜ்ய பாரத்தை மந்திரியிடமொப்புவித்து அரசன் ஆசாரியுடன் தவம்புரியச்சென்றார்.

## ஆயுர்வேதத்தின் பெருமை.

(1943ஆம் ஜனவரீ 20உ நடந்த மதுரை சுதேச வைத்திய சபையின் ஐந்தாவது வார்ஷிக மகோத்ஸவத்தில் மதுக்கூர் Dr. K. வைரோடி அவர்கள் செய்த உபன்யாசத்தின் சுருக்கம்)

ஆசாரியர்களே நேயர்களே கற்றோர்களின் முன்னிலையில் பெற்றோர்கள், உற்றோர்களால் நடத்தப்படும் இவ்வாண்டு பூர்த்திக்கொண்டாட்டத்தில் வேண்டுதல்களைச் செலுத்துவது தின்டாட்டமாகுமென்றெண்ணுகிறேன். ஆயினும் "மாமஹேஸ்மராயுயச" என்னும் நீதிபோதேசத்தைக் கைக்கொண்டும் ஆன்றோர்களின் ஆசிகளை எதிர்ப்பார்த்தும் பிழைகளைப் பொறுத்துக்கொள்வீர்களென வேண்டுகிறேன். அநேகப் பழுப்பாளிகளால் கூடி அல்லும் பகலும் ஆராய்ந்துப்பார்த்தும் முடிவு கண்டுபிடிக்க முடியாப்பொருளான ஆயுர்வேதத்தைக்கண்டு ஆசாரியர்களும் ஆசிரியர்களும் விஷயங்களைச் சூத்திர ரூபத்திலேயே காண்பித்திருப்பதால் அறிவில் குறைவுபெற்ற என்னால் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவுதூரம் குறிப்பிட முடியுமென்பதைத் முதலாவதாக யோசிப்பீர்களாக, எப்படியிருப்பினும் தெரிந்ததைக் கூறுவது பொருந்தியதாகுமென்று முன் வருகிறேன். ஆயுளைப்பொறுத்தமட்டில் (பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, பிணிகள் பரிஹாரங்கள் தடுக்குமுறைகள் முதலியன) வேண்டிய விஷயங்களையும் தன் மூலம் தர்மம், அர்த்தம், காமம் என்னும் புருடார்த்தங்களைக் கிட்டும் வழிகளைக்காண்பிக்கு நூல் ஆயுர்வேத மென்றழைக்கப்படுவதாய் இங்குபலரும் அறிந்து கொண்டதாகும். இதனை ஆயுர்வேதமென்பது வடமொழியும் ஆயுள் வேதமென்பது தென்மொழியாகுமே யொழிய இரண்டுகளின் கொள்கைகள் ஒற்றுமையாகவே யிருப்பதால் ஒரு தேசத்தினரைப் போல ஒரு மதத்தினரைப்போல ஒன்றைபெற்றிதெல்லோ முடிவு

கொள்ளவேண்டும். புருடார்த்தங்களை யடைய நோயற்ற வாழ்வை விரும்புவோர்கள் ஆயுர்வேதத்தில் அதிகக்கவனஞ்செலுத்தவேண்டுமாகும். இதன் கொள்கைப்படி பிரம்மாண்ட பிண்டங்களின் நன்மை தீமைகள் காற்று, நெருப்பு, தண்ணீர்களின் மூலத்தைப் பொறுத்திருக்கின்றன. ஸ்தான பேதங்களினால் நாமபேதங்கள் சொல்லப்பட்டுள்ளன. மானிட தேக விஷயத்தில் இம்மூன்று, வாதபித்த கபங்களாகும். காரணார்த்தமாக இதுகள் தேகத்தின் இயற்கையின் கெடுதல்களைக் கிளப்புமாதலால் தோஷங்களென்றும் தேக தாரணம் செய்வதால் தாதுக்கள் என்றும் அழைக்கப்படுவதுண்டு. வைத்ய ஸம்பிரதாயத்தில் விசேஷமாகத் திரிதோஷங்கள் என்று வழங்கப்படுகின்றன. உலக வஸ்துக்கள் யாவற்றினும் திரிதோஷத்தன்மைகளிருக்கின்றன. இதுகளின் ஸமநிலைமை சௌக்யமென்றும் விஷமநிலைமை வியாதியென்றும் விளக்கியுள்ளார். விஷம நிலைமை ஏற்படாது இதுகளை சதாகாத்து வருமாகில் ஆரோக்யத்துடன் தர்மம், அர்த்தம், காமம் என்றும் திரிவர்க்கங்களையும் கடைசியாக மோக்ஷத்தையும் அடையச்செய்வதே இதன் முடிவாகுமென்று உட்கருத்தாகும். ஸஹஜமாகவும் நிமித்தமாகவும் இவைகள் கோளாறுகளைக்கிளப்புவதுண்டென்பதையுணர்ந்து நடக்கவாறு எச்சரிக்கையுடனிருப்பின் ஆரோக்யமென்னும் குறைவற்ற செல்வத்தை யடைய விரும்பாதவர்கள் கிடையாதன்றோ. ஆதிமைபெற்ற ருக்வேதத்தின் மூலமாக ஆயுர்வேதத்தைக் கருதுகிறார்கள். ஒற்றுமையாகவும் விபரமாகவும் இதன் வரலாறுகள் பலவங்குள்ளன. அதர்வணவேதத்தின் உபவேதமென்றும் சிலர் நம்புகிறார்கள். இதில் காணும் பல மந்திர தந்திரங்கள் அவ்வேதத்திலுமிருக்கின்றன. முடிவையுரைக்க என்போன்றவர்களால் முடியாத காரியமாகும். எவ்விதமிருப்பினும் படைப்புக்குமுன் நான்முகன் வாய்வழியாக வேதங்களுடன் வெளிப்பட்டு சிஷ்யப்பிரசிஷ்ய பரம்பரையாக இப்புவியில் வியாபகமேற்பட்டு மக்களுக்கு ஊக்கத்தையும் நோக்கத்தையுமுண்டுபண்ணி யுண்டான சிக்குகளை நீக்கிவைத்து வரும், வனப்புகளைக்கண்டு அயலார்களும் அரவ்தர்களும் பொறுமைகொண்டு முறைநகலைக் கட்டிச்சென்று கைகொடுத்துக்கையாளன்

Registered No. M. 4018.

டுவந்தமையால் ஆங்காங்கு நீர்வளம் நிறம்பப் பொருந்திய இளம் பயிர்போல் செழிக்கயாரம்பித்தது. வளரவளரக் காண்போரின் கண்களைப்பறிக்கலாயிற்று. அலங்கார நோக்கங்கள் வலுக்கலாயின். அஷ்டமூர்த்திபாரும் இவ்வாயுர்வேதம் பூர்ணரூப அங்கங்களுடன் பல்லாயிரவருட பரியந்தம் மனிதர்களுக்குமட்டுமல்லாது மற்றும் பிறவிகள் முழுமைக்கும் பயனையளித்துவரக் காலகொடுமையினால் அரசர்களின் தடைகளுக்கும் ஆசிரியர்களின் அசிரத்தைகளுக்கும் ஆதரிப்போரின் அனுதாபங்களுக்கும்,பிணியாளர்களின் ஏமாற்றங்களுக்கும் பொதுமக்களின் ஆரோக்யக்குறைகளுக்கும் நோக்கம்கொள்ள விடப்படலாயிற்று. இருப்பினும் சிறந்தது என்ற முறையில் முக்கிய பல விஷயங்களில் பலன் கைக்கூட அப்புதப்பெண்கள் இதனையின்றும் பணிய வேண்டியிருப்பது பலரறிந்த இரகஸ்யமன்றோ. இதன் நிரிதோஷ தத்வத்தினால் அப் பெண்களில் ஒருவரும் நாளுக்குநாள் சந்தேசிப்புகள் கக்காலத்து மேற்படுவதில்லை என்பது இதன் உறுதியை வெளிப்படுத்துகிறதல்லவா. புத்தகாலம் முதல்கொண்டும் பின்பும் வேற்றுசசக்திகளினால் புறக்கணிக்கப்பட வாரம்பித்த இவ்வைத்தியம்கேடிமியில்லாது கீழ்நோக்கவாரம்பித்தது. வந்தவந்த மல்லர்கள் தலைளைப்பூசுது கட்டிக்கொண்டே வந்ததினால் மெயமேலும் பள்ளத்திற்குள் தள்ளப்பட்டது. ஊரார்கள் ஊக்கவுணர்ச்சிகளைக் கைவிட்டனர். உட்புகுந்தவர்கள் பெண்டாட்டிகளை மட்டில் கட்டித்தழுவினர். இளைத்தக் கிழப்பருவத்திலிருப்பினும் இங்கிருப்பவள் அவர்களுக்கு அதிகச்சிறந்த அப்பெண்களை என்ற மாமியாள்தான் என்று கின்றிற்றேனும் இவர்களின் நெஞ்சத்தில் படவில்லை. சொந்தக்காரர்கள் கூட தன்னைப் பராமரிக்காதிருக்கையில் (பாரதமக்கள்) புறமக்களை (விதேசியர்கள்) அண்டி உயிர் பிழைப்பதைவிட்ட தற்கொலை புரிவதே உத்தமமெனக்கருதி ஆயுர்வேதம் அடிப்பாதாளத்தில் விழலாயிற்று. சொந்த வலுவினால் எதிரிகளை வெல்லத் திறமை பெற்றிருப்பினும் (இராவணாதிகளை யழிக்காதுவிட்ட வீதாதேவியைப்போல) சேர்ந்தவர்களின் முடிவு முயற்சிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. உட்கவலை ஊசலாட உயிருடன் போராட ஆஞ்சனேயர் பிராட்டிக்கு புத்துயிர் ஊட்டினது

(முதல்பக்கம் பார்க்க)

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |